பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஐப்பசி 30 ஜு!ஹஜ் 3 இதழ் 275
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-11-77

# கலைஞருக்கும் 27 பேருக்கும் 26-ம் திகதிவரை காவல்!

சென்னை, நவ. 14

தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியும், அவருடன் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட 27 பேரும் இம்மாதம் 26ம் திகதிவரை தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டனர்!

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சென்னை வந்தபோது, கடந்த அக்டோபர் மாதம் 30ந் திகதி மாலை தி மு க தலைவர் கலைஞர் கருணாநிதியும், தி. மு க பிரமுகர்கள் 27 பேரும் சதிக் குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டு இம்மாதம் 14ம் திகதிவரை காவலில் வைக்கப் பட்டனர். இவர்கள் இன்று காலை, சென்னை மெட்ரோ பொலிடன் மாஜிஸ்திரேட் திரு ஆர் குருசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது, இவர்களை இம்மாதம் 26ம் திகதிவரை தொடர்ந்து காவலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்

தி மு க தலைவர்கள் மீதான குற்றப்பத்திரிகைகள் இன்று தாக்கல் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவில்லை. நீதிமன்றத்துக்கு வெளியே பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# இன்று 'பட்ஜட்!'

## யாருக்கு நிவாரணம்?

## பிற்பகல் தெரிந்துவிடும்

(கொழும்பு)

**இன்று பட்ஜட் தினம். சுமார் நானூறு கோடி ரூபாய் துண்டு விழும் தொகையை எவ்விதமாகச் சமாளிக்கலாம் என்பது குறித்து நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் இன்று பிற்பகல் பல யோசனைகளைத் தெரிவிப்பார்.**

இம்மாதம் 7-ந் திகதி தேசிய அரசுப் பேரவையில் நிதி அமைச்சர் சமர்ப்பித்த 1978-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் பூர்வாங்க மதிப்பீடுகளின்படி, வருமானம் சுமார் 600 கோடியாகவும் செலவினம் 1000 கோடியாகவும் துண்டு விழும் தொகை சுமார் 400 கோடி ரூபாவாகவும் இருந்தது. துண்டு விழும் தொகையை எவ்விதமாகச் சரிக்கட்டலாம் என்பதற்கான யோசனைகளை நிதி அமைச்சர் இன்று அறிவிப்பார்.

தேசிய அரசுப் பேரவை இன்று பிற்பகல் இரண்டு மணிக்குக் கூடும். இதனைத் தொடர்ந்து நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரான திரு. ரொனி டி மெல் தமது 'பட்ஜட்' உரையை நிகழ்த்துவார். இவரது உரையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடியாக அஞ்சல் செய்யும். இன்றைய நிகழ்ச்சிகளை திரைப்படக் கூட்டுத்தாபனம் படம் பிடிக்கும்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் யார் யாருக்கு நிவாரணம், ஆறுதல் கிடைக்கும்; எந்தெந்த பொருள்கள் விலை குறையும்; எவை விலை ஏறும், எந்தெந்தத் திட்டங்களில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் போன்ற எல்லா விபரங்களும் இன்று பிற்பகல் தெரிந்துவிடும்.

### "கடும முயற்சி தியாகம் வேண்டும்"

நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்று தேசிய அரசுப் பேரவையில் பேசுகையில், கடந்த அரசு செய்துவிட்ட தவறுகளை இலேசில் சரிக்கட்ட முடியாது என்றும் கடந்த அரசு விட்ட பிழைகளினால் உண்டான பொருளாதாரச் சிக்கலிலிருந்து நாட்டை விடுவிக்க பெருமளவு முயற்சியும், தியாகமும் வேண்டும் என்றும் கூறினர்.

பாராளுமன்ற நடவடிக்கைகளை மக்களும் நேரடியாக அறிந்துகொள்ளும் வகையில் பட்ஜட் உரையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடியாக அஞ்சல் செய்யும் என்றும் கூறினர்.

### அதிக நிதி ஒதுக்கீடு

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட்டில் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்ட அமைச்சுக்களுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தை அடிப்படை

[6-ம் பக்கம் பார்க்க]

## புற்றுநோய் வருவதற்கு பாக்கும் ஒரு காரணம்!

பம்பாய், நவ. 14

புற்றுநோய் ஏற்படுவதற்கு பாக்கும் ஒருகாரணம். என்று பம்பாயிலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் நீண்டகாலமாக நடைபெற்றுவரும் பரிசோதனைகளைத் தொடர்ந்து இந்த முடிவு கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"புகையிலையினால் புற்றுநோய் வருகிறது புகையிலையுடன் பாக்குபாவித்தாலும் புற்றுநோய் உண்டாகிறது என்றும், பாக்குடன் சுண்ணாம்பு பாவித்தால் எளிதில் புற்றுநோய் வருகிறதென்றும், புற்றுநோய் ஏற்படுவதற்கு பாக்கும் ஒரு காரணமாக இருக்கிறது என்றும் இந்த ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

# தமிழ்நாடு புயல்: 81 பேர் பலி!

சென்னை, நவ. 14

தமிழ்நாட்டில் கடந்த சனிக்கிழமை வீசிய சூறாவளியினால் 81 பேர் பலியானதாக இன்று மாலை அறிவிக்கப்பட்டது.

நாகபட்டினத்தில் 42பேரும், மதுரையில் 31 பேரும், செங்கல்பட்டில் 4 பேரும், சேலத்தில் 4 பேரும் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

### மீண்டும் புயல்?

இதற்கிடையே தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளை 16ம் திகதி புதன்கிழமை மீண்டும் புயல் தாக்கலாம் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது

### காஞ்சியில் துயரசம்பவம்

காஞ்சிபுரத்தில் இன்று காலை திருத்தணி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று, வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதில் பலர் மாண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்த பஸ்ஸில் எத்தனை பிரயாணிகள் இருந்தனர் என்றுதெரியவில்லை. மாலை வரை நான்கு சடலங்கள்கண்டு பிடிக்கப்பட்டன. 40 பேர்காயமடைந்துள்ளனர். பஸ் கண்டக்டரும், ஒரு பெண்ணும் இதில் பலியானர்கள்.

வெள்ளத்தினால் தமிழ்நாட்டில் 7000 குடும்பங்கள் வீடிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஹெலிகொப்டர் மூலமாக உணவுப்பொட்டலங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் வெள்ளம்,

(6-பக்கம் பார்க்க)

## தீ விபத்து 40 பேர் பலி!

மணிலா, நவ. 14

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் உள்ள ஒரு உல்லாசப் பிரயாணிகள் ஹோட்டலில் இன்று பகல் ஏற்பட்ட தீ விபத்தில் 40 பேர் மாண்டனர்!

## வெளிநாடு செல்லும் அமைச்சர் குழு

(கொழும்பு)

மூன்று அமைச்சர்கள் உட்பட நால்வரைக் கொண்ட தூதுக்குழுவொன்று ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நாடுகளுடன் பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு பிரிட்டன் செல்கிறது

இக்குழுவில் வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி, புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ், இவரது செயலாளர் ஆகியோர் உள்ளனர் இவர்கள் முதலில் பிரிட்டனுக்கும், பின்னர் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஒல்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார்கள்.

இலங்கையில் தைக்கப்பட்ட ஆடைகளை ஏற்றுமதி செய்வது சம்பந்தமாகவும் பேச்சு நடைபெறுமென்றும் இலங்கையில் தயாரான இந்த ஆடைகளை ஏற்றுமதி செய்வதில் கடந்த வருடத்தில் பிரச்னைகள் ஏற்பட்டதென்றும், இதன்விளைவாக ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டதென்றும் புடவை கைத்தொழில் அமைச்சர் தெரிவித்தார்

# '7 வருடங்களும் என்மகள் சந்தோஷமாக வாழவில்லை"

## ராஜேஸ்வரி கொலைவழக்கில் தாயார் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'ஆடி அமாவாசைக்குத் தமது தாய்வீட்டிற்குச் செல்வதற்கு நகை இரவல் வாங்கித் தரும்படி இராஜேஸ்வரி தமது கணவனிடம் எதிரியிடம் கேட்டார். எதிரி இரவல் வாங்கித் தருவதாகச் சொன்னார்.

தச்சன்தோப்பு கோயிலாக்கண்டி இராஜேஸ்வரி கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் கந்தையா நடேசு என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்று யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரனை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 74ம் ஆண்டு ஜூலை மாதம் 18ம திகதி கோயிலாக்கண்டியில் இராஜேஸ்வரியை (24வயது) நஞ்சூட்டிக் கொலை செய்ததாக அவரது கணவன் கந்தையா இராமலிங்கம் என்பவர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் வி. என். நவரத்தினம், செ. அம்பிகைபாலன், வி. பி. ஏ. வரதராசா, எஸ்.

[6-ம் பக்கம் பார்க்க

# என். சி. ஜி. ஈ. பரீட்சை இல்லை!

(கொழும்பு)

என். ஸி. ஜி. ஈ. பரீட்சையை இனிமேல் நடத்துவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது!

அரசாங்கத்தின் இத்தீர்மானம் உடனடியாகவே அமுலுக்கு வருவதைத்தொடர்ந்து; இவ்வருடம் நடைபெறவிருந்த என். ஸி. ஜி. ஈ. பரீட்சை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப் படும்.

தற்போது என் ஸி ஜி ஈ பரீட்சைக்குத் தோற்றவிருந்த 9ம் வகுப்பு மாணவர்கள் அடுத்த வருடம் நடைபெறும் 10-வது வகுப்பு பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

# வரி விளம்பரம்

## தேவை

CCE O/L A/L வகுப்புகளுக்கு மாதிரி வினாத்தாள்கள் தயாரிக்கவும் ரியூட்டோறியல் திருத்தவும் அனுபவமுள்ள ஆசிரியர் தேவை. பரீட்சை அலுவலக வீதத்திலும் கூடிய வேதனம் அளிக்கப்படும். SCIENTEST C/o கில்னர் அக்கடமி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7669

G.C.E. A/L வகுப்புகளில் விஞ்ஞான பாடங்களை நம்பிக்கையுடன் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. கில்னர் அக்கடமி காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7668

சான்றிதழ் பெற்ற பயிற்றப்பட்ட அனுபவமுள்ள (or S. C. M.) மருத்துவ மாது தேவை. உடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் அரசாங்க விதியின்படி. The Jaffna Polyclinic, 61 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7656

## காணவில்லை

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி இலந்தொழுந்து பிள்ளைப்பொடி என்பவரை 12ந் திகதி முதல் காணவில்லை. வயது 48, பொது நிறம், வட்ட முகம், பச்சைச் சேலை அணிந்திருக்கிறார். கண்டவர்கள் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது கா. பிள்ளைப்பொடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்ற விலாசத்திற்கோ அறிவிக்கவும். 7677

## கல்வி

G. C. E. A/L விஞ்ஞான, வர்த்தக கலை வகுப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும், விசேட பட்டதாரிகளாலும் நடாத்தப்படுகின்றன. விரும்பிய பாடங்களை எடுப்பதற்கும், மீட்டல் வகுப்பில் பங்குகொள்ளவும் வசதி உண்டு. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7651

## தவறிவிட்டது

பண்டத்தரிப்புக்கும் மாதகலுக்கும் இடையில் இ. போ. ச. பாஸ், அடையாள அட்டை அடங்கிய பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். V தம்பிராசா, மாதகல் மேற்கு, மாதகல். சன்மானம் வழங்கப்படும். 7680

## CLASSES

G.C.E. A/L: Rapid revision classes. Beginning Tuesday 3-30. Kilner Academy, Kankesanthurai Rd. Jaffna. 7667

## சாவகச்சேரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

4000 வெற்றுச் சாக்கு விற்பனை செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் யாவும் சங்கத்தினால் வழங்கப்படும்பத்திரத்தில் 23-11-77 முற்பகல் 11 மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் மெழுகிட்ட தபாலுறையில் "சாக்குக் கேள்விப்பத்திரம்" என எழுதி அனுப்பவேண்டும். கேள்விப் பத்திரங்களை வைப்புப் பணம் ரூபா 300/ம் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தி 21-11-77 வரை பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி,
12-11-77. 7672

## திருட்டிற்கு இவர்கள் காரணம்?

[வவுனியா]

ரயில் பிரயாணிகள் ரயில்களில் கடலை, வடை முதலானவை விற்பனை செய்வோரால் பெரிதும் கஷ்டமுறுகின்றனராம்,

ரயிலில் நடைபெறும் திருட்டுகளுக்கு இத்தகையோரே காரணமாயிருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

இல. ஈடு/14405

1. குமாரசுவாமி லோகேஸ்வரன்
2. க தி குமாரசுவாமி
3. குமாரசுவாமி பெண் சிவஞானவல்லி மூவரும் 19/1 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

எதிராக

1. சின்னப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
2. கிருஷ்ணபிள்ளை பெண் இராசேஸ்வரி இருவரும் இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர் யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் இல. ஈடு/14405 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977ம் ஆண்டு மார்கழி மாதம் 5ம் திகதி (5-12-77) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 2,780/-ம் 7-6-74 தொடக்கம் 3-10-74 வரைக்கும் 2,000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 389-60 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'நாயன்மாரகுளம் கிழக்கு வளவு' உ 213/249ல் பதியப்பட்ட நில. பரப்பு 5ல் கிழக்குப்புறமாக நிந்தமாக்கப்பட்ட நில பரப்பு 2½ம் இனறும் பயிர்களும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கு சுப்பர் பெண் பறுபதத்தின் ஆதனம். மேற்கு சின்னப்பிள்ளை இராசரத்தினத்தின் ஆதனம். மேற்படி கிணற்றில் மேற்கு காணிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் புறநீங்கலாக இதனுடனும்

அ. போ. எதிர்மன்னசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
21-9-77 7673

இன்று பட்ஜட் உரை

# வாழ்க்கைச் செலவு குறையுமா?

## மக்கள் எதிர்பார்க்கிறார்கள்

தேசிய அரசுப் பேரவை இன்று பி. பி. 2 மணிக்குக் கூடும்போது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்ட உரையை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் சபையில் நிகழ்த்துவார்.

கடந்த 7-ம் தேதி அமைச்சர் சபையில் சமர்ப்பித்த 1978-ம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீட்டு அறிக்கையின்படி துண்டுவிழும் தொகையான 362 கோடி 51 லட்சம் ரூபாவையும் எப்படிச் சமாளிப்பது என்பது பற்றிய 'இரகசியத்தை' அமைச்சர் இன்று வெளியிடுவார்,

இந்த 'இரகசியத்தை' அறிவதில் ஆவல்கொள்வதற்கு மக்கள் கடந்த காலங்களில் பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த அரசின் காலப்பகுதிகளில் சில தடவைகளில் இந்த இரகசியத்தை அறிவதில் மக்கள் அஞ்சியதும் உண்டு.

அமைச்சர் திரு. ரொனி டி மெல் சமர்ப்பித்த மதிப்பீடுகளின்படி 1978ம் ஆண்டுக்கான மொத்த செலவினம் 1043 கோடி 86 லட்சத்து 19 ஆயிரத்து 216 ரூபாவாகும்.

வருமானம் 681 கோடி 34 லட்சத்து 24 ஆயிரம் ரூபா.

கடந்த அரசாங்கத்தில் நிதியமைச்சராகவிருந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் 1977ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 957 கோடி 57 லட்சத்து 32 ஆயிரத்து 183 ரூபாவாகும்.

நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க அடுத்த ஆண்டுக்கு 86 கோடி 28 லட்சத்து 87 ஆயிரத்து 33 ரூபா கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

நடப்பு ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்த தொகை 307 கோடி 90 லட்சத்து 67 ஆயிரத்து 183 ரூபாவாகும். இவ்வாண்டை விட அடுத்தஆண்டு 54 கோடி 61 லட்சத்து 28 ஆயிரத்து 33 ரூபா கூடுதலாகத் துண்டுவிழுந்திருக்கிறது.

### இவற்றுக்கு பட்ஜட்டில் நிதி ஒதுக்கவில்லை

மகாவலி அபிவிருத்தி, சுதந்திர வர்த்தக வலயம் போன்ற அரசின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி இந்த வரவு செலவுத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இவற்றுக்கான நிதி முற்றிலும் வெளிநாடுகளிலிருந்தே பெறப்படவிருக்கிறது.

5 ஆண்டுத் திட்டத்தையும், 3 கட்டங்களையும் கொண்டதான மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு 1500 கோடி ரூபா செலவிடப்படவிருக்கிறது. இதில் முதல் வருடத்தில் 300 கோடி ரூபா செலவிடப்படும்.

இதற்கான பணம் இன்னமும் பெறப்படவில்லை. இப்பணத்தை எங்கிருந்து - எப்படிப்பெறப்போகிறோம் என்பது தமக்கே இதுவரை தெரியாதென்றும், ஆனால் 30 ஆண்டுகள் திட்டமிடப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை 5 ஆண்டுகளில் முடிப்போம் என்றும் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா சில தினங்களின்முன் பேரவையில் சபதமிட்டிருக்கிறார்.

### வர்த்தக வலயத்திற்கு 200 கோடி ரூபா

சுதந்திர வர்த்தக வலயத்துக்கு 200 கோடி ரூபா செலவிடப்படவிருக்கிறது.

இவற்றைவிட, ஒரு லட்சம் வீடுகள் கட்டும் திட்டம் இருக்கிறது. ஆயிரம் பஸ்கள் வாங்கப்படவிருக்கின்றன. ஆயிரம் புகைவண்டி இணைப்புப் பெட்டிகளும், 200 புகையிரத என்ஜின்களும் வாங்கப்படவிருக்கின்றன,

இவையனைத்தும் வரவு செலவுத் திட்டத்துக்கு அப்பால் வெளிநாட்டு உதவிகள்மூலமே பெறப்படவிருக்கின்றன,

வெளிநாட்டு உதவிகள் முந்திய அரசாங்கத்தைப் போலன்றி பெருமளவில் தமக்கு கிடைக்கும் என்று கூறும் நிதி அமைச்சர், ஆனால் கடந்த 7 ஆண்டு காலங்களில் சிதைவடைந்துவிட்ட நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப அவ்வுதவிகள் போதுமா என்பது தமக்கு சந்தேகமே என்றும் சொல்கிறார்.

புகையிரதப் பாதைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் சீர்குலைந்திருப்பதாகவும், மருந்துப்பொருள்கள் இல்லை என்றும், விவசாய, மீன்பிடி உற்

(5ம் பக்கம் பார்க்க)


## VIDYA BHAVAN SPECIAL COURSES

Under Expert Teachers.

1. FREE Revision classes in English & Religion for students sitting for the 1977 N.C.H.E. and G.C.E. (O/L) Exam: on Tuesday & Thursday evening from 4-30 P.M.
2. Rapid English coaching for G.C.E. (A/L) and H.N.C.E. Exams. (Local & Foreign) on Saturdays from 2 30-5 P.M.
3. Complete Master course in English through latest Linguaphone & Train and Test method for university students and those preparing for Law; Accountancy and Professional Exams. on Sundays from 9-12 Noon.

Call Personally.

Director of Studies
Vidya Bhavan,
341, Columbuturai Road,
Jaffna.
7679


## நினைவாஞ்சலி

திருமதி லில்லி இராசம்மா
சி. அல்பிரட் நவரத்தினராசா

காலம் சென்ற திரு. சி. அல்பிரட் நவரத்தினராசா அவர்களின் முதலாவது நினைவுதினமான 16-11-77 புதன்கிழமை காலை 8-00 மணியளவில் ஆராதனை வைபவம் கருணை நிலையம் கிளிநொச்சியில் நடைபெறும். அத்துடன் அன்னாரதும் அவரது தாயார் திருமதி லில்லி இராசம்மா அவர்களதும் நினைவுதினம், 20-11-77 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் 'வசந்திவாசா' கிளிநொச்சியில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி ஜே. யோகலிங்கம்
(சகோதரி)

7671

## தம்பலகமம் ப. நோ. கூ. சங்கம் தம்பலகமம்.

### வெற்றிடம் III தர கடன் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவி

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வசிப்பிடத் தகமை: குறைந்தது இரண்டு வருடமாவது அந்த மாவட்டத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும்.

வயது: 23க்கும் 40க்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும். கூட்டுறவு ஊழியருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

வேதனம்: 300 — 500 / 12.50 X 10, 15 X 5

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி 3-12-77, தலைவர், தம்பலகமம் ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

தேவையான தராதரம் மற்றும் தகமைகள்பற்றிய விளக்கங்கள் யாவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் பெறுவதற்காக போஸ்டல் ஓடர் ஒரு ரூபா அனுப்புவதுடன் சொந்த விலாசம் இடப்பட்ட 15 சத முத்திரையொட்டப்பட்ட தபால் உறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். அன்றேல் நேரடியாக வந்தும் பெற்றுக்கொள்ளலாம். சங்கத்தின் விண்ணப்பப்பத்திரத்திலேயே விண்ணப்பிக்கலாம்.

தலைவர்

தம்பலகமம் ப. நோ. கூ. சங்கம்,
தம்பலகமம்.
9-11-1977.

7676

# தமிழ் நாட்டில் கடும் புயல், வெள்ளம்: பல கோடி ரூபா இழப்பு!

## நேரில் பார்த்து எம். ஜி. ஆர். கவலை

சென்னை, நவ. 14

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் புயற்காற்றினாலும் பல கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

விமானத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்னர் சென்னை திரும்பியதும் திரு. எம். ஜி. ஆர். மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாகபட்டினம், நாகூர், திருச்சி ஆகிய இடங்களே புயலினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக மத்திய அரசு பெருமளவில் உதவும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் எம். ஜி இராமச்சந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

வெள்ளநிலைபற்றி திரு. எம்.ஜி ஆர். மேலும் தெரிவித்ததாவது;

### 20 ஆயிரம் பேர் வீடிழப்பு

நாகபட்டினம், நாகூர் ஆகிய இடங்களில் 20 ஆயிரம் பேர் வீடிழந்துள்ளனர். நாகபட்டினம் துறைமுகத்தில் கட்டப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான படகுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன் அரசகளஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 4000 தொன்கோதுமையும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

### திருச்சி - தஞ்சாவூரில்

திருச்சியில் 2 ஆயிரம் பேரும் தஞ்சாவூரில் 5 ஆயிரம் பேரும் வீடிழந்துள்ளனர்.

இதேவேளையில் தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் புயல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரண உதவிகளை மேற்கொள்ளுமாறு அ இ அ தி மு க எம் பியும் அக்கட்சிப் பாராளுமன்றக் கமிட்டியின் தலைவருமான திரு. பி. சோமசுந்தரம் பிரதம மந்திரியையும் நிதிமந்திரியையும் கோரியுள்ளார். (இ)

### 80 மீனவரை காணவில்லை

கோழிக்கோடு. நவ 14

கோழிக்கோட்டிலிருந்து அராபியக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 80 மீனவர்களைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் சென்ற வேறு 40 பேர் கரைக்குத் திரும்பியுள்ளனர் என்றும் மேலும் 13 பேரை அராபிய சரக்குக் கப்பல் ஒன்று காப்பாற்றிக் கரை சேர்த்தது என்றும் அறிவிக்கப்பட்டது.

### மண் சரிவு; 31 பேர் பலி!

பாலக்காட்டில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவினால் 31 பேர் பலியாகியுள்ளனர். (இ)

### புயலுக்கு 38 பேர் பலி

சென்னை, நவ 14

நாகபட்டினம், நாகூர் ஆகிய இடங்களில் புயலினால் 38 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

மத்தியகிழக்குப் பிரச்னை:

# இஸ்ரேல் செல்ல சதாத் விருப்பம்

## மீண்டும் அறிவிப்பு

லண்டன், நவ. 14

இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் விரும்பினால் தாம் அவரைஜெருசலத்தில் வைத்து சந்திக்கத்தயாராக இருப்பதாக எகிப்திய அதிபர் அன்வர் சதாத் மீண்டும் அறிவித்துள்ளார்.

திரு. பெகினின் அழைப்புக்குப் பதிலளிக்கையிலேயே சதாத் இவ்வாறு கூறினார்.

இஸ்ரேலியப் பாராளுமன்றத்தின் விசேட கூட்டம் ஒன்றைக்கூட்டுமாறும் ஜனப் சதாத் திரு. பெகினைக்கேட்டுக் கொண்டுள்ளார். (உ)

### பிரிட்டனில் 8 பேர் பலி!

லண்டன், நவ 14

பிரிட்டனில் பெய்த பெருமழையினாலும் புயற்காற்றினாலும் 8 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டது.

### பூட்டோ விடுதலை மனு!

இஸ்லாமாபாத், நவ 14

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைதாகி சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜனப் சுல்பிகார் அலிபூட்டோ தம்மை விடுதலை செய்யுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மாதம் 27ம் திகதி இம்மனுமீதான விசாரணை நடைபெறும். (இ)

### தாய்லாந்தின் புதிய பிரதமர்

லண்டன், நவ 14

தாய்லாந்தின் புதிய பிரதம மந்திரியாக ஆயுதப்படைகளின் தளபதி ஜெனரல் ஷக் சமானந்த நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

இந்திரா கைது விவகாரம்:

## அபிப்பிராயம்கூற மொரார்ஜி மறுப்பு

புதுடில்லி, நவ. 14

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலைசெய்யப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் கைதுவிவகாரம் குறித்துஇப்போதைய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கருத்துவெளியிட மறுத்துவிட்டார்.

ஜனதா கட்சியின் காரியக் கமிட்டிக்கூட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் இது பற்றிக் கேட்டபோதே திரு. மொரார்ஜி எதுவும் கூற மறுத்துவிட்டார்.

திருமதி காந்தியின் கைது பற்றிய விவகாரம் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப் பட்டிருப்பதால் தாம் இதுபற்றி எதுவும் கூறவிரும்பவில்லை என்றும் பிரதமர் கூறினார். (இ)

# சோவியத், கியூபா உறவுகளை சோமாலியா துண்டித்தது

## 6 ஆயிரம்ரஷ்யருக்குவெளியேற்றஉத்தரவு

மொகடிஷு நவ. 14

சோவியத் யூனியனுடனான 3 ஆண்டு நட்புறவு ஒப்பந்தத்தை இடையில் முறித்துக் கொண்ட சோமாலியா, கியூபாவுடனான ராஜதந்திர உறவுகளையும் துண்டித்துள்ளது.

சோமாலியாவுக்கும் எதியோப்பியாவுக்கும் இடையிலான யுத்தத்தில் சோவியத் யூனியன் எதியோப்பியாவுக்கு ஆதரவு வழங்கியது என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே சோமாலியா இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியாவில் 6 ஆயிரம் இராணுவ வீரர்கள், தொழில் நுட்பவியலாளர்களை இவ் வாரத்துக்குள்ளும் கியூபா ராஜதந்திரிகளை இரண்டு வாரத்துக்குள்ளும், நாட்டைவிட்டு வெளியேறுமாறு சோமாலிய அரசு உத்தரவிட்டுள்ளது.

சோவியத் யூனியனுடன் நட்புறவு ஒப்பந்தம் செய்து கொண்ட முதலாவது ஆபிரிக்க நாடு சோமாலியா என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பிஸ்கட்சொக்லட் எனக்கூறி போதை வஸ்து கடத்தல்!

## எம். பி., பொலிஸ் அதிகாரி உட்பட 70 பேர் கைது!!

ரபாத், நவ. 14

பிஸ்கட், சொக்லட் என்று கூறி மொராக்கோவிலிருந்து போதை வஸ்துக்களைக் கடத்த முயன்ற எம். பி. ஒருவர் உட்பட 70 பேரை மொராக்கோ பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

'மரிகுவானா' என்ற போதை வஸ்தை இவர்கள் ஸ்பெயினுக்குக் கடத்திச் செல்ல முயன்றனராம்.

பொலிஸ் அதிகாரிகள், சுங்கப்பகுதி அதிகாரிகள், அரச புகையிலைக் கூட்டுத்தாபன அதிகாரிகளும்கைது செய்யப்பட்டோரில் அடங்குவர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

# கூட்டுறவு இயக்கத்தில் இலங்கை மகளிரின் பங்கு

## சுவீடிஷ் பெண்கள் ஆராய்வர்

(கொழும்பு)

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தில் மகளிரின் ஈடுபாடு பற்றிஆராய்வதற்கு சுவீடிஷ் கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த மகளிர் குழுவொன்று இலங்கைக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் விஜயம் செய்ய விருக்கின்றது.

இது குறித்து இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் உதவிச் செயலாளர் திரு. நீல அதிகாரம்கே மாவட்டச் செயலாளர்களுக்குச் சுற்று நிருபம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். அந்நிருபத்தில் பின்வரும் விடயங்கள் குறித்து தகவல் கோரப்பட்டுள்ளது.

கூட்டுறவு மகளிர் குழுக்களை நிறுவுவதில் ஈடுபட்டுள்ள ப. நோ. கூ சங்கங்களின் தொகை. அத்துடன் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள இத்தகைய குழுக்களின் எண்ணிக்கை.

இதுவரையும் இத்தகைய குழுக்களை நிறுவாத கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய விபரங்கள். அத்துடன் இக்குழுக்களை விரைவில் உருவாக்கக்கூடிய சாத்தியப்பாடுகள்.

அண்மையில் நிறுவப்பட்ட கூட்டுறவு மகளிர் குழுக்களுக்கும் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்குமிடையிலான இணைப்பு.

இம்மகளிர் குழுக்களின் செயல்பாடுகள் பற்றிய விரங்கள். (இ)

### பலத்த சேதம்

(வேலணை)

தீவுப்பகுதியில் மழையுடன் வீசிய கடும்காற்றினால் பனை மரங்கள் பல பெயர்ந்து விழுந்ததுடன் பலத்த சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

நெல்வயல்களும் பெருமழையால் நிரம்பிவிட்டன. தொலைபேசி, மின் இணைப்புகளும் பாதிக்கப்பட்டன. (உ)

### இந்திரா விசாரணையின்பின் அறிக்கை

புதுடில்லி, நவ 14

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி காந்தி இம்மாதம் 22, 23ம் திகதிகளில் ஷா கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த பின்னர் இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று இக்கமிஷனுடன் தொடர்புள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

### வாள்வெட்டு

(நெல்லியடி)

குடும்பத் தகராறு காரணமாக, இரு குடும்பங்களிடையே நடந்ததாக்குதல் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானார்.

காயமடைந்த சோமஸ்கந்த மூர்த்தி கணேசமூர்த்தி மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்குத் தலையிலும் கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

தொண்டமனாறு செருடாவிலில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர். (க-அ)

### செபவாரம் ஆரம்பம்

(அரியாலை)

அகில உலக வை. எம் ஸி ஏ. இயக்கமும், வை. டபிள்யூ. சி. ஏ. இயக்கமும் நேற்று முன்தினம் ஞாயிறு தொடக்கம் 19ந் திகதி வரை உலகம் முழுவதும் செபவாரமாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி ஸ்தாபனங்களின் கிளைகளின் சார்பில் ஞாயிறு மாலை பரி.யோவான் ஆலயத்தில் விசேஷ ஆரம்ப ஆராதனை நடைபெற்றது. இவ்வாராதனையில் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வணகுரிய பிதா ஜே.ஜே.ஞானப்பிரகாசம் பிரசங்கம் நிகழத்தினார். (அ)

### கட்டாக்காலி நாய்களை ஒழிக்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியிலும் பஜார் வட்டாரத்திலும் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் கடந்தசில வாரங்களாக மிகவும் அதிகரித்திருப்பதாகப் புகார் கூறப்படுகிறது இரவில் இந்தப்பகுதிகளில் செல்லும் பொதுமக்களுக்கு இந்த நாய்கள் பலத்த உபத்திரவத்தை கொடுத்து வருகின்றனவாம்.

சமீபத்தில் இக்கட்டாக்காலி நாயொன்று விசர் பிடித்து இவ் வழியால் சென்ற பாடசாலை மாணவிக்குக் கடித்ததாம். அத்துடன் வீடுகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கும் இந்த விசர் நாய் கடித்துள்ளதினால் அவற்றிற்கும் விசர் தொற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த கட்டாக்காலி நாய்களை ஒழித்துக்கட்டி பொதுமக்களைப் பாதுகாக்குமாறு பண்டத்தரிப்பு பட்டண விசேஷ ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

### திடீர்சோதனையில் சிக்கினர்

(நெல்லியடி)

விலைக் கட்டுப்பாட்டதிகாரிகள் நெல்லியடி, கரவெட்டி, கோயிற் சந்தைப் பகுதிகளில் திடீர் பரிசோதனை நடத்தினர்கள்.

கோயிற் சந்தைப் பகுதிகளில் உள்ள கடை முதலாளி ஒருவர் இவர்களிடம் சிக்கிக் கொண்டார். (க)

தமது தொகுதி ச. ச. நிலையங்களுக்கு

# பேரவைச்சம்பளத்தைவட்டு எம். பி. தியாகம் செய்கிருர்

(சுழிபுரம்)

"வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, தமது தேசிய அரசுப் பேரவை வேதனத்தைத் தமது தொகுதியிலுள்ள ஏழு சனசமூக நிலையங்களுக்கும், மாதந்தோறும் பகிர்ந்து வழங்க முடிவு செய்துள்ளார்.

பண்ணாகம் அண்ணா கலை மன்ற விசேஷ பொதுக் கூட்டத்தில், வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பண்டிதர் ப. இராசகுரு தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. திருநாவுக்கரசு மேலும் கூறியதாவது:-

"இந்த வேதனம் மூலம், பல தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளேன். அரசாங்கம் உதவி செய்யும் என்று நாம் எதிர்பார்த்துக் காலத்தை வீணாக்காது எங்கள் திறமையைப் பயன்படுத்தவேண்டும். அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் சொந்த முயற்சியாலேயே எமது தேவைகளை நிறைவேற்ற முடியும். கொழும்பிலுள்ள தமிழ் முதலாளிகளைத் தமிழ்ப்பகுதிகளில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்குமாறு நான் கேட்டதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்."

(அ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மாணவர் பேரவைக்கும் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலத் திற்குமிடையிலான விவாதமொன்று இன்று இடம்பெறுகின்றது.

நாகரீக முன்னேற்றத்திற்குக் காரணம் இலக்கியமா? விஞ்ஞானமா? என்னும் தலைப்பிலான இவ்விவாதம் கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய மண்டபத்தில்பிற்பகல்இரண்டு மணிக்கு ஆரம்பமாகும்.

இவ்விவாத அரங்கிற்கு மாணவர் பேரவைத் தலைவர் திரு. என். ரி. ஜெகன் தலைமை தாங்குவார். (கா-உ)

# "நமது தேவைகளை நாமே பூர்த்திசெய்ய வேண்டும்"

— வ. ந. நவரத்தினம்

(யாழ்ப்பாணம்)

"நாம் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணுவிடில் எங்களை நாம் ஆழத் தகுதியற்ற நிலையில் நாமே நம்மைத் தள்ளிவிட வேண்டிய சூழ்நிலையை நாம் ஒருபோதும் ஏற்படுத்தக்கூடாது."

சாவகச்சேரியில் இலங்கை வங்கிக் கிளையைத் திறந்து வைத்துப்பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:

நாம் என்றுமே சுதந்திர புருஷர்களாக வாழவேண்டும். அயல்நாட்டைப் பொருளாதாரத்திற்கு நம்பியிருக்கும் நிலை மாறவேண்டும். எங்கள் சுயதேவைகள் எத்தனையையும் நாம் எங்கள் கையாலேயே நிறைவேற்றவேண்டும். நாம் எங்கள் பொருளாதாரத்தில் ஒரு சிறந்த ஸ்திரமான நிலையில் ஒரு பொருளாதார அத்திபாரத்தை நிலைநாட்டி அடுக்குமாடி ரூபமாக மாற்றவேண்டும். பொருளாதார வளர்ச்சியில் பொது ஸ்தாபனங்கள் மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையில் நாட்டின் பல கோணங்களிலும் மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் பூர்த்திசெய்யும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களுள் வங்கிகளும் அடங்கும்.

இவ்வங்கிகளினால் ஏழைத் தொழிலாளர் வர்க்கத்தினர் தங்கள் தொழிலின் சார்பாக முன்னேற்றம் அடையக்கூடிய முறையில் வங்கிகள் உதவுகின்றன. ஏழைமக்கள் பெறவேண்டிய கடன் வசதிகளைப்பெற்று நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஈட்டி பொருளாதார சுதந்திரமடைய பொதுமக்கள் அபிவிருத்திவேலைகளில் ஈடுபடவேண்டும்.

இவ்வங்கிக் கிளையை சாவகச்சேரித் தொகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க 69ம் ஆண்டு தொடக்கம் அரசிடம் வற்புறுத்தியதனால் 1977-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

யாழ். அரசாங்கஅதிபர் திரு. டபிள்யு, ஏ. எஸ். விஜயபால பேசுகையில் கூறியதாவது:

இலங்கையில் முதல்முதல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கி 1962ம் ஆண்டு இலங்கையின் தேசிய வங்கியாக மாற்றப்பட்டது பொதுமக்களின் நன்மைக்காக அவர்களின் வேண்டுகோளிற்காக தேசிய வங்சியாக மாற்றப்பட்ட இலங்கை வங்கியின் முதலீடு செய்வதும், அதில் கடன் எடுப்பதுவும் இந்த வங்கிகளைப் பாதுகாப்பதுவும் பொதுமக்களின் கடமையாகும்.

திரு. எஸ். கே. திரவியநாயகம், வங்கி முகாமையாளர் திரு. நேசமுத்து, யாழ். பிரதேச உதவி முகாமையாளர் திரு. சிவஞானசோதி ஆகியோரும் பேசினர்.

(மட்-கொடி நி.)

# "கிராமங்களின் வளர்ச்சியில் அரசு அதிக அக்கறை"

(சங்கானை)

"கிராமப்புற வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டே அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. நாடு பூராவும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கிராம முன்னேற்றச் சங்கம் என்ற ரீதியில் நிறுவி நாட்டுமக்களுக்குச் சிறந்த சேவைசெய்ய அரசு வழிவகுத்துள்ளது."

என்று வலி-மேற்கு கிராம முன்னேற்றச்சங்க உத்தியோகத்தர் திரு. வி. சுப்பிரமணியம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் சங்கானை கலாச்சார முன்னேற்ற மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மன்றத் தலைவர் திரு. கா கணேசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராமங்களுக்கும் வேண்டிய முன்னேற்றங்களைச் செய்வதற்கு கிராம முன்னேற்ற இலாகா வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு முன்வந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சிவபாதம் மன்றச் செயலாளர் திரு. மா. செல்லக்கண்டு, திரு. ஆ. வீரசிங்கம், திரு. நா. இராசதுரை ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர். (அ)

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் மாலை அதிர்ஷ்டம் பாரிக்கப்பட்ட 638-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
01 R 0433
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
32 C 0900
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
35 G 0332
ரூபா 10,000

தலா 1500 ரூபா பெறும் நூறு ஆறுதல் பரிசுகளின் விவரம் வருமாறு;

| | |
|---|---|
| 02 A 0305 | 03 O 0498 |
| 07 A 0544 | 03 O 0712 |
| 39 A 0640 | 17 O 0482 |
| 01 B 0825 | 45 O 0133 |
| 18 B 0683 | 47 O 0111 |
| 20 B 0891 | 14 P 0499 |
| 28 B 0981 | 30 P 0427 |
| 60 B 0382 | 37 P 0246 |
| 04 C 0736 | 39 P 0338 |
| 14 C 0250 | 41 P 0077 |
| 46 C 0111 | 43 P 0058 |
| 01 D 0582 | 16 Q 0833 |
| 25 D 0420 | 24 Q 0541 |
| 42 D 0591 | 42 Q 0905 |
| 47 D 0236 | 04 R 0658 |
| 49 D 0200 | 32 R 0474 |
| 20 E 0926 | 37 R 0608 |
| 21 E 0890 | 08 S 0270 |
| 02 F 0331 | 15 S 0966 |
| 20 F 0387 | 17 S 0144 |
| 23 F 0544 | 26 S 0912 |
| 42 F 0875 | 53 S 0986 |
| 25 G 0383 | 12 T 0403 |
| 49 G 0960 | 39 T 0331 |
| 59 G 0082 | 45 T 0155 |
| 60 G 0595 | 51 T 0154 |
| 06 H 0893 | 52 T 0792 |
| 44 H 0643 | 60 T 0554 |
| 01 J 0478 | 06 U 0254 |
| 18 J 0147 | 07 U 0253 |
| 22 J 0816 | 08 U 0108 |
| 25 J 0114 | 10 U 0816 |
| 30 J 0866 | 18 U 0153 |
| 35 J 0779 | 44 U 0252 |
| 36 J 0148 | 48 V 0685 |
| 49 J 0579 | 04 W 0025 |
| 15 K 0621 | 20 W 0346 |
| 30 K 0146 | 40 W 0450 |
| 43 K 0729 | 07 X 0844 |
| 52 K 0462 | 24 X 0996 |
| 19 L 0400 | 32 X 0948 |
| 38 L 0169 | 42 X 0101 |
| 23 M 0520 | 56 X 0934 |
| 49 M 0010 | 31 Y 0833 |
| 53 M 0341 | 59 Y 0548 |
| 07 N 0545 | 13 Z 0802 |
| 44 N 00411 | 25 Z 0735 |
| 40 N 0967 | 41 Z 0967 |
| 56 N 0622 | 42 Z 0345 |
| 02 O 0728 | 56 Z 0746 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

## பிரியாவிடை

(வவனியா)

வவனியா மேலதிக பிரதம கல்வியதிகாரியாகக் கடமையாற்றி மன்னுருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுச் செல்லும் ஜனாப் எம். எம். செரீப்புக்கு கல்விப் பணிமனையில் பிரியாவிடை உபசாரம் நடைபெற்றது. [உ]

ஆசிரியருக்குக் கடிதம்:

# புனிதப்பணியில் திருக்குடும்பத்துறவிகள்

அதி. வண. பெற்றக்கினி ஆயர் தம் ஆளுகை காலத்தில் பெண்கள் கல்வியைத் திறம்பட நடத்துவதற்கு, இத்துறவிகளை இங்கு வரவழைத்தார். இக்கன்னியர் இங்கு வருகை தந்து பட்டணங்களிலும் கிராமங்களிலும் கல்லூரிகளையும், சிறு பாடசாலைகளையும் உருவாக்கி இறைபணியை மையமாகக் கொண்டு பெண்கள் கல்வியைத் திறம்பட நடத்திவந்தனர். இவர்கள் சேவையை இக்கல்லூரிகளும் பாடசாலைகளும் எமக்கு இன்றும் எடுத்து இயம்புகின்றன. இவர்கள் தம் உடல், பொருள், ஆவியை இச்சேவைக்கு அர்ப்பணித்து நாட்டிற்கு நற்தாய்மார்களை உருவாக்கிக் கொடுத்தனர். இவர்கள் நற்பணியை என்றும் நாம் மறக்கமுடியாது.

இக்கல்விப் பணியுடன் இக்கன்னியர் வயோதிபரைப் பராமரித்தல், நோயாளரைப் பராமரித்தல் முதலிய அரும் பெருந் தொண்டுகளையும் ஏற்றுப் பணிபுரிந்தனர். கிறிஸ்து பெருமானின் அன்பின் கட்டளைகளுக்கு அமைய பிறரன்புக்கு ஏற்ப பணிபுரிந்தனர். இவர்கள் பணியை அறிந்த பெரியோர் இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். தற்பொழுது இவர்கள் கல்விச் சேவை தடைபெற்றதினால், தங்கள் சேவையை வேறுவகைகளில் செய்யத் துணிந்து விவேகக்குறைபாடான பிள்ளைகளுக்குக் கல்வியூட்டும் முறையில் சில கன்னியர் பயிற்சி பெற்றனர்.

விவேக மனக்குறைபாடான பிள்ளைகளின் வாழ்வில் அக்கறைகொண்ட உடுவில் கிறிஸ்தவ பெரியார் ஒருவர் தமது குறிக்கோளை நிறைவேற்ற இத்துறவிகளே சிறந்தவர்களெனக் கருதி, உடுவில் பெண்கள் கல்லூரியின் அருகாமையில் ஓரிடத்தை இவர்களிடம் கையளித்து, தமது இலட்சியத்தைப் பூர்த்தி செய்யுமாறு வேண்டினார். இவர்களும் இத்தொண்டை மனப்பூரணமாய் ஏற்று இப்பெரியாரின் பொருளுதவியுடன் இக்கல்விச் சாலையை உருவாக்கியிருக்கின்றனர். இப்பாடசாலையே இப்பிரதேசத்தில் முதன் முதல் உருவாகியிருக்கின்றது.

இந்நிலையிலுள்ள பிள்ளைகளுடைய பெற்றோர், யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள திருக்குடும்பக் கன்னியர்மடத்துடன் தொடர்பு கொண்டு, அப்பிள்ளைகளைச் சமூகத்தில் வாழத் துணைபுரிய இக்கன்னியரின் அரும்பெருந் தொண்டை ஊக்குவிப்பார்களாக.

ஆ. ஹென்றி
சுன்னாகம்.

# பெற்ரேலில் மண்ணெண்ணை கலப்பு? கொழும்பில் பரிசோதனை

[வேலணை]

வேலணை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விற்பனை செய்யாது தடுத்துவைக்கப்பட்டிருந்த 'சுப்பர்' ரக பெற்ரேல் பரிசோதனையின் பொருட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பெற்ரேலில் மண்ணெண்ணை கலக்கப்பட்டிருந்ததாகப் புகார் செய்யப்பட்டிருந்ததால் இப்பெற்ரேல் விற்பனை தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

'சுப்பர்' க பெற்ரேல் விற்பனையில் தடங்கல் ஏற்படாதிருக்க சங்கத்தலைவரும் உதவி அரசாங்க அதிபருமான திரு எஸ் சுப்பிரமணியம், சங்கப் பொதுமுகாமையாளர் திரு எஸ் செல்லத்துரை ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர். [உ]

# "ஹட்சின் அம்மையாரின் சேவை அளப்பரியது"

## கிளிநொச்சி எம். பி. பாராட்டு

[அரியாலை]

"அன்று மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் கருதப்பட்ட கிளிநொச்சியில் கருணைநிலையம் ஒன்றினை அமைத்து அதன் மூலம் வறுமைப் பிணியிலும் நோய் துன்பத்திலும் வாழ்ந்த மக்களுக்கு செல்வி எம் வி ஹட்சின் அம்மையார் 23 வருடங்களாக ஆற்றிய பணி அளப்பரியது

இவ்வாறு கொழும்பு திருச்சபை அர்ச் டீக்கன் வண பிதா சுவீதின் பெரேரு ஞண்டோ கிளிநொச்சி கருணை நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ மிஷனரி செல்வி எம் வி ஹட்சின்அம்மையாரின் பொன்விழாவில் தலைமையுரை நிகழ்த்துகையில் கூறினர்

கிளிநொச்சி எம் பி ஆனந்தசங்கரி பேசுகையில், கிளிநொச்சி மக்கள் என்றென்றும் ஹட்சின் அம்மையாருக்கு நன்றியுடையவராக இருப்பர் என்றார்.

வண பிதா ஏ சி தம்பிராசா போராசிரியர் திரு கே நேசையா ஆகியோரும் பேசினர்.

ஹட்சின் அம்மையார் தமக்களிக்கப்பட்ட கௌரவத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசினர். (உ)

## இடமாற்றம்

(வவனியா)

வவனியா மாவட்ட மேலதிக பிரதம கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய ஜனாப் எம். செரிப் மன்னார் மாவட்ட பிரதம கல்வியதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட பிரதம கல்வியதிகாரியாகக் கடமையாற்றும் திரு. எஸ். கி. கருணனந்தன் வவனியா மாவட்ட மேலதிக பிரதம கல்வியதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வவனியா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. பங்குராஸ் ஜீவரத்தினம் மட்டக்களப்பு வந்தாறுமூலை முஸ்லீம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 10 ஆண்டுகளும் வெளி மாவட்டத்திலேயேசேவை செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
"HOLIDAY ON THE BUSES"
Full Comedy color

French Film Festival
Daily at 4-45 7 & 9-30 P. M. only
18-11-77 WOMAN AT HER WINDOW
21-11-77 MONSIEUR PAPA
23-11-77 COUSIN COUSINE

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கே. பாலசந்தரின்
சொல்லத்தான் நினைக்கிறேன்
(புதியபிரதி)

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

கடைசி வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன்-சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்

ரியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மாலாசிங்க - சன்ஜே
தில்லகி
(ஹிந்தி)

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9 30
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

ஐந்தாவது வெற்றி வாரம்!
ராஜா- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]



# நிதி ஒதுக்கீடு

| | 1977 | 1978 |
|---|---|---|
| ஜனாதிபதி | 810,000 | 750,300 |
| பிரதமர் | 624,200 | 639,100 |
| மந்திரிசபை | 1,092,300 | 1,129,400 |
| பேரவை | 5,662,450 | 8,168,800 |
| சபைமுதல்வர் | 202,900 | 201,500 |
| எதிர்க்கட்சி முதல்வர் | 96,600 | 125,750 |
| **அமைச்சுகள்** | | |
| 1. பாதுகாப்பு | 430,680,000 | 380,257,000 |
| 2. திட்டமிடல் பொருளாதாரம் | 420,573,150 | 27,725,150 |
| 3. திட்ட அமுலாக்கல் | 860,000 | 946,100 |
| 4. நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் | 620,029391 | 854,498,030 |
| 5. வர்த்தகம் | 34,523,138 | 31,109,635 |
| 6. கல்வி | 943,509,922 | 1,037,477,410 |
| 7. விமான, கப்பல் போக்குவரத்து உல்லாசத்துறை | 142,155,749 | 99,413,735 |
| 8. தொழில் | 26,438,806 | 22,917,834 |
| 9. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் | 840,344,588 | 542,794,150 |
| 10. உள்ளூராட்சி, வீடமைப்பு, நிருமாணம் | 331,317,603 | 444,326,092 |
| 11. கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் | 644,034,917 | 620,488,865 |
| 12. நிதி | 2,089,508,658 | 2,714,928,894 |
| 13. போக்குவரத்து | 516,088,144 | 565,125,310 |
| 14. தோட்டக் கைத்தொழில் | 170,599,238 | 104,362,315 |
| 15. நீதி | 73,191,000 | 80,330,390 |
| 16. விவசாயக்காணி | 613,770,995 | 560,430,175 |
| 17. மீன்பிடி | 58,633,472 | 127,794,9 5 |
| 18. தபால் தந்தி | 250,078,695 | 243,039,133 |
| 19. சுகாதாரம் | 458,798,450 | 528,298,409 |
| 20. தகவல் ஒலிபரப்பு | 50,606,135 | 52,243,820 |
| 21. சமூகசேவை | 47,847,854 | 50,276,154 |
| 22. கலாச்சாரம் | 14,783,937 | 14,827,620 |
| 23. பாராளுமன்ற விவகார விளையாட்டு | 7,773,927 | 7,886,850 |
| 24. உணவு, கூட்டுறவு | 1,112,670,230 | 1,205,566,620 |
| 25. புடவைக்கைத்தொழில் | ............ | 22,687,060 |
| மொத்தம் | 9,575,732,183 | 10,438,619 216 |

# வாழ்க்கைச் செலவு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
பத்தி உட்பட பல அரச-தனியார் தொழிற்சாலைகள் மோசமான நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் கூறுகிறார்.

## அரசும் பிரதமரும் சங்கல்பம்

எப்படியிருப்பினும் நாட்டில் பொருளாதார கட்டுப்பாட்டை நீக்கி - சுதந்திரமாக இயங்கவைப்பது அவசியம் என்றும், இது சிரமமான காரியமாகவேயிருந்தாலும் பிரதமரும், அரசாங்கமும் அதற்காக சங்கல்பம் பூண்டிருப்பதாகவும் திரு. ரொனி டி, மெல் சில தினங்களின்முன் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டில் கூறினார்.

வரவுக்கும் செலவுக்குமிடையேயான பெரும் இடைவெளியை நிரப்புவதில் தாம் பெரும் சிக்கலை எதிர்நோக்க வேண்டியிருக்கிறதென்றும் திரு, ரொனி டி மெல் கூறியிருந்தார். உற்பத்திக்கும், தொழிலுக்குமான ஆண்டு என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## சிந்தனைக்குரியன

அமைச்சர் நாடுதிரும்பிய பின்னர் பல இடங்களிலும் தெரிவித்த இக்கருத்துக்கள் தான் சிந்திக்கப்படவேண்டியன, அமைச்சரின் இன்றைய வரவுசெலவுத் திட்டவுரையின் 'கட்டியமே' இக்கருத்துக்கள் எனலாம்.

இறக்குமதி ஏற்றுமதி தொடர்பான வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டில் தளர்ச்சி ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுப் பயணங்களுக்கும் இக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படலாம்

உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகளைப் பேணும் விதத்தில் வியாபார மாற்று வரியும் குறைக்கப்படலாம்.

## 'பீக்ஸ்' மீளாய்வு?

'பீக்ஸ்' முறையும் மீளாய்வு செய்யப்படலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

சம்பள உயர்வும் அரசாங்க தனியார் ஊழியருக்கு வழங்கப் படுமென்று நம்பப்படுகிறது

வெளிநாட்டுப் பயணம் தொடர்பான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டு, கல்வி மற்றும் வைத்திய சிகிச்சைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும், தேவையான வெளிநாட்டுச் செலாவணி பெறவும் வழிசெய்யப்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க இலாக்காக்கள், கூட்டுத்தாபனங்கள் செலாவணிக் கட்டுப்பாடின்றி பொருள்களை இறக்குமதி செய்யவும் அனுமதிக்கப்படலாம்.

## பங்கீட்டு முறையில் மாற்றம்

இலங்கையின் அரசியலில் முக்கிய அம்சமான அரிசி, சீனி பங்கீட்டு முறைகளிலும் முக்கிய மாற்றங்களை எதிர் பார்க்கலாம்.

சீனியின் விலையிலும் பங்கீட்டு அளவிலும் குறைவு ஏற்படலாமென்றும் சொல்லப் படுகிறது.

முக்கியமான சில எதிர்பார்ப்புகள் இவைதான்.

கடந்த அரசின் காலப் பகுதியில் மக்களுக்கு ஏற்பட்ட சுமைகளுக்கு கலாநிதி என். எம். தான் காரணம் என்று கூறி கடந்த அரசின் கடைசி வரவு செலவுத் திட்டத்தை பீலிக்ஸ் சமர்ப்பித்தார்.

இப்போது, புதிய நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் முந்திய இரு நிதியமைச்சர்களுமே நாட்டைச் சீரழித்து விட்டார்கள் என்கிறார்.

கடந்த ஆண்டில் ஈரான் 50 கோடி ரூபா நிதியுதவி வழங்க முன்வந்தபோது திட்ட மெதுவுமின்மையால் அவ்வுதவியை கடந்த அரசு ஏற்கவில்லை என்றும் திரு. ரொனி டி. மெல் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஆக மக்களுக்குத் தேவை கட்டுப்பாடற்ற பாவனைப் பொருள், குறைந்த வாழ்க்கைச் செலவு, தொழில் வாய்ப்பு, என்பனவே.

எப்போதுமில்லாத மிகப் பெரும் பலத்தை மக்களிடமிருந்து பெற்று வந்த அரசாங்கம் மக்களின் அபிலாஷைகளை காப்பாற்றிநடந்தேயாகவேண்டியது அவசியம் என்பதை நிதியமைச்சரோ, பிரதமரோ அரசாங்கமே அறியாமலிருக்க முடியாது,

அமைச்சரின் இந்த நிதியின் இரண்டாம் வாசிப்பின் மீதான வரவு செலவுத் திட்டம் மீதான பொது விவாதம் இம்மாதம் 18ம் திகதி அரம்பமாகி டிசம்பர் 1ந் திகதி வரையும் குழுநிலை விவாதம் டிசம்பர் 5ம் தேதியிலிருந்து 23ந் தேதி வரையும் பொது விடுமுறை, ஞாயிறு தினங்களைத் தவிர சனிக்கிழமைகளிலுமாக 27 தினங்கள் நடைபெறும்.

மாலி

### மணிவாக்கு

புதிய சமுதாயத்தை தன் கருப்பையில் கொண்டுள்ள பழைய சமுதாயத்திற்கு பலாத்காரமே மருத்துவிச்சியாகும்.

— கார்ல்மாக்ஸ்.

ஈழநாடு
The Eelanaadu

# வரவு-செலவு!

1978-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை இன்று தேசிய அரசுப்பேரவையில் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் சமர்ப்பிக்கிறார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபின் கொண்டுவரப்படும் முதலாவது வரவு-செலவுத்திட்டம் இது.

புதிய வருடத்தில் அரசாங்கம் சுமார் 681 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறது. சுமார் 1043 கோடி ரூபா செலவிடுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது. உத்தேச மதிப்பீட்டின்படி சுமார் முன்னூற்றிஅறுபத்திரெண்டரைக்கோடி ரூபாய் துண்டு விழுகிறது.

துண்டு விழும் இத்தொகையை எப்படிச் சரிக்கட்டப் போகிறாரென்பதை இன்று நிதி அமைச்சர் தமது வரவு-செலவுத்திட்ட உரையில் விளக்கவிருக்கிறார்.

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய நிதி அமைச்சர் பழைய நிதி அமைச்சர்கள் அதிர்ச்சியடையக்கூடிய விதத்தில் வெளிநாடுகளிலிருந்து உதவி கிடைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதாகவும் அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமல்கிடைக்கச் செய்வதாகவும் உறுதியளித்து மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்கு வந்திருக்கிறது இந்த அரசு.

இப்படியான வாக்குறுதிகளை அளித்து ஆட்சிபீடமேறிய முன்னைய அரசாங்கத்தினர் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்ததற்கான காரணத்தை இந்த அரசாங்கத்தினர் நன்கு அறிவர்.

ஆட்சிபீடத்திலமர்ந்ததும் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டாலும் சில நல்ல காரியங்களைச்செய்து மக்களுக்கு நம்பிக்கையேற்படுத்தியிருக்கிறது.

எந்தப் பொருளுக்கும் 'கியூ'வில் நிற்கும் நிலை இன்று இல்லாமல் போய்விட்டது ஒன்றே இதற்குச் சான்று.

ஸ்திரமான அரசாங்கம் ஏற்பட்டுள்ளதென்ற நம்பிக்கையினாலும் தேசியமயம் என்ற பீதி நீங்கியதாலும் வெளிநாடுகள் இங்கு உதவி செய்வதற்கு மட்டுமல்ல அந்நிய முதலீடுகள் இங்கு வருவதற்கும் வாய்ப்பேற்பட்டுள்ளது.

இன்றைய வரவு-செலவுத் திட்டம் பொதுமக்கள் மீது மேலும் பளு ஏற்றக்கூடியதாக இருக்கமாட்டாதென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

# சுவர் இடிந்து விழுந்து பெண் மரணம் வரணியில் சம்பவம்

(மட்டுவில்)

சுவர் இடிந்து விழுந்ததால் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பெண் ஒருவர் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவியசம்பவம் ஒன்று வரணி-மட்டுவிலில் நடைபெற்றுள்ளது.

செல்லப்பா செல்லம்மா (வயது 33) என்ற இந்த மணமாகாத பெண் சம்பவதினம் தனித்துத் தாம் வாழ்ந்துவந்த வீட்டில் உறங்கிகொண்டிருந்த போது வீட்டுச்சுவர் இடிந்து அவர் மீது விழுந்ததாம்.

அயல்வீட்டுப் பெண்ணுல சின்னம்மாவின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசெல்லப்பட்டும்உயிரைக்காப்பாற்ற முடியவில்லையாம்.

சாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ். சுப்பிரமணியம் சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. புவனேந்திரன் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (உ)

# 7 வருடங்களும்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சுரேந்திரன் ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி வி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர்.

கந்தையா நடேசு. சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரி எனது தம்பி. இறந்தவர் எதிரியின் மனைவி. நாங்கள் எல்லோரும் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம். எதிரி வசித்த வீடு நாலுபக்கமும் அடைத்துக் கதவுபோடப்பட்டுள்ளது. அவர்கள் புறம்பாகச் சமைப்பார்கள்.

### கணவன் மனைவி சச்சரவு

சம்பவத்திற்கு முதல்நாள் இராஜேஸ்வரியின் தம்பி வந்துவிட்டுப் போனதாகக் கதைத்தார்கள். அன்று பின்னேரம் நாலரை மணியளவில் எதிரியும் மனைவியும் கதைவளிப்பட்டார்கள்.

ஆடிஅமாவாசைக்குத் தாய் வீடு போவதற்கு நகை இரவல் வாங்கித் தரும்படி இராஜேஸ்வரி எதிரியிடம் கேட்டார். வாங்கித் தருவதாக எதிரி சொன்னார். என்ன நடந்தது என எனக்குத் தெரியாது,

நீதி; சாப்பிடும்போது தகராறுப்பட்டார்களா?- சந்தோஷமாகச் சாப்பிட்டார்கள்.

நீதி; எத்தனை மணிக்கு நித்திரைக்குச் சென்றீர்கள்?- எட்டரைமணிக்கு.

நீதி; எல்லோரும் படுத்துவிட்டார்களா?-ஆம்

### பக்கத்து வளவில் சடலம் கிடந்தது

நீதி: இரவு யாரும் வந்தார்களா?- தெரியாது. மறுநாள் காலை எதிரி இராமலிங்கம் தன் மனைவியைக் காணவில்லையென்றார். நாங்கள் எல்லோரும் தேடினேம். அருகில் உள்ள வளவிற்குள் இராஜேஸ்வரி காணப்பட்டார்.

நீதிபதி: உயிர் இருந்ததா?- ஆம். அப்போதுதான் எல்லோரும் குளறினேம்.

நீதி; அவர் கதைத்தாரா?- கதைக்கவில்லை.

சட்டத்தரணி வி. என். நவரத்தினம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: கிருமிநாசினிக்கு வாந்தி எடுத்தால் நல்லது என்றீர்கள்?--ஆம்

சட்: அவரை வாந்தியெடுக்கச் செய்தார்கள்?- ஆம்

சட்: அதன்பின் நீர் எங்கு சென்றீர்?- விதானையாரிடம்.

சட்: அப்போ அங்கு நின்றவர்கள் இராஜேஸ்வரியை வாந்தி எடுக்கச் செய்தார்கள்?-ஆம்

### ராஜேஸ்வரியின் தாயார் சாட்சியம்

இறந்தவரின் தாயாரான திருநெல்வேலியைச் சேர்ந்தவரான மயில்வாகனம் காமாட்சி கூறியதாவது: இராஜேஸ்வரி எனது மகள். ஏழு வருடத்திற்கு முன் எதிரியைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் உண்டு. என் மகள் கோயிலாக்கண்டியில் கணவன் வீட்டில் வாழ்ந்து வந்தார்.

ஏழு வருடத்தில் அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்தது கிடையாது. இடையிடையே பிரிந்திருந்தார்கள். எதிரியின் பெற்றோர்சொல்லி கொண்டிருந்ததைக்கேட்டுநடந்தபடியால சச்சரவு ஏற்பட்டது. நகைத் தகராறு எதுவும் இல்லை.

என் மகள் இறப்பதற்கு அடுத்தநாள் ஆடிஅமாவாசை முதல்நாள் இரண்டு மணிக்கு என் மகளைக் கூட்டிவரும்படி என் மகனை அனுப்பினேம். ஏன் மகன் போனதும் விடிய வருவதாகச் சொல்லி அனுப்பினார்கள். அடுத்தநாள் காலை என் மகள் இறந்துவிட்டார் எனக் காரில் வந்து சொன்னார்கள். நான் அதே காரில் கோயிலாக்கண்டிக்குப் போனேன். அவர் இறந்து கிடந்தார்-

சட்டத்தரணி வி என் நவநவரத்தினம் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: மகள் ஏழு வருடமாகக் குழப்பத்துடன் வாழ்ந்தாரா? ஆம்

சட்: தன் மாமா மாமியுடன் வாழமாட்டேன் என்று சொன்னார்?-ஆம்

சட்: கட்டிய கணவன் வீட்டில்தான் வாழ வேண்டும் என நீங்கள் வற்புறுத்தினீர்கள்?-ஆம்

சட்? மகள் மறுக்க மறுக்க அவரைக் கணவன் வீட்டிற்கு அனுப்பினீர்கள்?-ஆம்

சட்: மாமன் மாமிகொடுமை தான் வாழ வைக்காமல்விட்டதா?-ஆம்

சட்: ஆடிஅமாசைக்குக் கட்டாயம் வருவதாக இராஜேஸ்வரி உங்கள் மகனிடம்சொல்லி அனுப்பினார்?-ஆம்

சட்: கொடுமையால் அவர் இறந்திருக்கிறார் என நினைத்தீர்கள்?. ஆம்

சட்: நீங்கள் சாட்சிகளைத் தேடி விசாரணை நடத்த ஆரம்பித்தீர்கள்?- நாங்கள் அப்படிச் செய்யவில்லை.

சட்- சம்பவத்தைக் கண்டதாக யாரும் கூறினார்களா?- இல்லை (க-அ)

### சூரசங்காரம்

(யாழ்ப்பாணம்)

நெதல்லிப்பழை கிழக்கு கவளாவத்தை ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோவிலின் கந்தசஷ்டி விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சி நாளை மாலை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் சூரசங்காரம், சண்முகஅர்ச்சனை, முடிசூட்டு விழா நடைபெறும்.

திருவிழாக்களில் சைவப்புலவர் பொன். தெய்வேந்திரன் சிறப்புரை ஆற்றிவருகின்றார். (கே)

# ஆராய்ச்சி நூல் அறிமுகவிழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் ''ஈழத்துப் பூராடனர்'' எழுதிய ஆராய்ச்சி நூல் அறிமுகவிழா இன்று மாலை மட்டக்களப்பு பொதுநூல் நிலைய மண்டபத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. ரீ. பாக்கியநாயகம் தலைமையில் நடைபெறும்.

அறிமுகஉரையை அன்புமணி நிகழ்த்த பட்டிருப்பு மகாவித்தியாலய அதிபர், வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையாவும், வித்துவான் எப். எக்ஸ். சீ. நடராசாவும் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

......

ஐயக்கோன்

# கொலை முயற்சி வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐயக்கோன் கொலை முயற்சி வழக்கில், சுகவீனம் காரணமாக சாட்சிஒருவர்வராததனுல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் உடுவிலில் 75 ஜூலை 11ம்தேதி வெ. செல்லத்துரை அல்லது ஐயக்கோனை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், அதே நேரத்தில் சு. பிரேமகுமாரை சுட்டுக்கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எம். மோதிலால் நேருவும், 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரனும் ஆஜரானர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர். அடுத்த வருடம் ஜனவரி மாதம் 23ம் தேதிக்கு இவ்வழக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

### அதிகாரிகள் அசிரத்தை?

(வவுனியா)

வவுனியா புகையிரதநிலய வீதியில் வைரவர் புளியங்குளம் சந்தியில் உள்ள பெரிய பாலைமரம் ஒன்று பெயர்ந்து விழும் நிலையில் உள்ளது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையாம். — [உ]

### இன்று—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முகமாக நீர்ப்பாசன அமைச்சுக்கு எண்பத்தைந்து கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது இது தவிர வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சு, கடற்றெழில் அமைச்சு, கல்வி அமைச்சு, நிதி திட்டமிடல் அமைச்சு ஆகியவற்றுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

### தமிழ்நாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சூறாவளியினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணஉதவியாக அனைத்து இந்திய அண்ணு தி. மு. கழகம், முதல் தவணையாக 25,000 ரூபாவை முதலமைச்சர் நிதிக்கு இன்றுவழங்கியது. தி. மு. கழகமும் இதே அளவு நிதியை தமிழக ஆளுநரின் காரியதரிசியிடம்கையளித்தது.

# நாடும் நடப்பும்

சமீபத்தில் கலவரம் வந்தாலும் வந்தது இப்போது யாழ்ப்பாணத்தில் வீடுபெற நிற்பவர்களின் நிலை பரிதாபமாக இருக்கிறது.

எல்லோரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் 'சிரித்திரன்' சிவாஜி வீட்டுக்காக அலைந்துகொண்டிருக்கிறார்,

மற்றொரு நண்பர் யாழ்ப்பாணத்தில் சொந்த வீடு வைத்துக்கொண்டு கொழும்பிலுள்ள வீட்டையும் சொந்தமாக்கிக்கொள்ள முனைந்துகொண்டிருப்பவர்களின் விலாசத்தைத் தேடிப்பிடித்துக் கடிதமாக எழுதிக்கொண்டிருக்கிறார். முத்திரைச் செலவேயொழிய வீடு கிடைப்பதாகக் காணேம்.

வாடகைக் கொடுத்த வீட்டிலிருந்து ஆளை வெளியே அனுப்ப முடியாமலிருந்த சிலருக்கு கலவரம் நல்லதொரு சந்தர்ப்பமாக வாய்ந்துவிட்டது. அவர்களை வெளியேற்றிவிட்டு அதிக வாடகைக்கு வீட்டைக் கொடுத்து இலாபம் தேடிக்கொள்கிறார்கள்!

யாழ்ப்பாண நகரிலும் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டங்கள் அவசியமாகிவிட்டது.

மாநகரசபையோ வீடமைப்பு அமைச்சோ இதில் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும்.

வீடு பெற நிற்பது சுலபமல்ல.

ஃ ஃ ஃ

இடையிடையே சூரிய ஒளி தெரிகிறது. திடீரென்று மேகங்கள் கறுத்து மழை பெய்வதும் நேற்று யாழ்ப்பாணத்தில் கண்ட காட்சி. இதைப் பார்த்த ஒரு நண்பர் ''யாழ்ப்பாணத்திலும் இப்போ கொழும்பு மாதிரி மழை பெய்யுது. கொழும்பு ஆட்களெல்லோரும் யாழ்ப்பாணத்துக்கு வந்ததால் கொழும்பு மழையும் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டதாக்கும்'' என்றார்.

ஃ ஃ ஃ

இன்று 'பட்ஜட்' சில தினங்களுக்கு முன்னர் தான் சிகரட்டின் மூன்று சதமாக அதிகரித்தது

மூன்று சதத்துடன் திருப்திப்படாத சில வியாபாரிகள் பத்துப் பதினைந்துசதம் என்று சம்பாதித்தார்கள்

இன்று 'பட்ஜட்' சமர்ப்பித்ததும் எத்தனை பேருக்கு எப்படி எப்படி அதிர்ஷ்டமோ!

ஒன்று மட்டும் நிச்சயம் எந்தப் பொருளின் விலையும் அதிகரித்தால் உடனே விலை ஏறிவிடும்; ஆனால் விலை குறைந்தால் மட்டும் உடனடியாகக் குறைந்துவிடாது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகள் பலரையும் பலஇடங்களிலும் குடியேற்றும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிக்குடியேற்றப்பட்டவர்களின் காணிகளை நாட்டுவதற்கு வாழைக் கன்றுகள், மரவள்ளி, முருங்கைத்தடிகள் தேவைப்படுவதாகவும் இவற்றைத் தந்து உதவினுல் பெரும் பயன் கிடைக்குமென்றும் அகதிகள் புனர்வாழ்வுச் சபையினர் தெரிவிக்கின்றனர். அவர்களே வந்து இவற்றைப் பெற்றுக் கொள்வார்களாம்,

ஃ ஃ ஃ

இன்று புதுக்குடியிருப்பு, பரந்தன், கிளிநொச்சி ஆகிய குடியேற்றப்பகுதிகளில் தாவலர்கள் காவலர்களராஜாபனம்விலைகளை வழங்கிறுக்கிறார்; நல்ல பணி; மக்கள் இதைச்சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

— ஊர்சுற்றி

## ஏஜன்ட் தேவை

சித்தங்கேணிப் பகுதியில் ''ஈழநாடு'' பத்திரிகை விற்பனை செய்வதற்கு முற்பணம் செலுத்தக் கூடிய விற்பனை ஏஜன்ட் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
'ஈழநாடு' லிமிட்டெட்

7681

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிகோவில் மேல்வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் திகதியச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registered as News paper in Sri Lanka.